# கொவிட்-19 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களிடையே அதிகரித்து வரும் சமூக வலைத்தளப் பாவனையும். அதன் சாதக, பாதகங்களும்

# Increase of Using social media and its Pros & Cons Among the Undergraduates During Covid-19.

P.M.A. Aleeshan[1], H.F. Badhusha[2], F. Afrose[3] & U. Israth[4]

[1,2,3 & 4] *Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka*
*anwaralisan96@gmail.com*

***ABSTRACT***

*The adaptation of the Internet and social media sites has been accepted by the international community and its increasing use has become a new evolution of modern change. In addition, all human activities have been transferred to the Internet during the Covid-19 crisis. In addition, learning activities take place through the social media that runs the world in the palm of one's hand. In this situation, realistic educational activities become essential among university students. The use of social media sites is integrated with real-time education. In that sense, the use of social media sites has many positive effects on university students and many disadvantages. Therefore, this study has been conducted with the aim of identifying the status of social media usage among university students and its pros and cons. The study was conducted with the second year students of Islamic Studies and Arabic Language at the South Eastern University of Sri Lanka. This study uses a quantitative descriptive research methodology and is presented through the Google Form for obtaining the first standard data. Data were collected on one hundred selected second-year students from the faculty of the university. Also used as secondary data were research articles, journals, and website information related to the topic. The study found that an increase in the use of social media sites among second-year students, with positive outcomes such as subject-related access to documents, learning and access to global information, and the disadvantages being wastage of time, lack of interest in learning, and physical, psychological, social, economic, and personal problems.*

**Key words:** *Online Education, Social Networks, social media, Covid 19, University Students*

**ஆய்வுச் சுருக்கம்**

*இணையம் மற்றும் சமூக வலைதளங்களின் தழுவலானது அனைத்துலகச் சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பயன்பாடுகள் அதிகரித்தலானது நவீன மாற்றங்களின் புதியதொரு பரிணாமங்களாகிவிட்டன. அதிலும் கொவிட் - 19 இடர்காலத்தில் மனிதனின் அனைத்துச் செயற்பாடுகளும் இணையவழிக்கு மாற்றமடைந்திருக்கின்றன. இந்நிலையில் நிகழ்நிலை மூலமான கல்விச் செயற்பாடுகளானது பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இன்றியமையாத*


ISBN: 978-624-5736-55-3

*ஒன்றாக மாறிவிட்டது. அதிலும் உலகையே தனது உள்ளங்கையில் இயக்கி வரும் சமூக ஊடகங்களின் வாயிலாகவும் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. நிகழ்நிலைக் கல்வியுடன் சமூக வலைத்தளங்கள் பாவனையானது ஒன்றித்துள்ளது. அந்தவகையில் சமூக வலைதளங்களின் பாவனையானது பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியில் பல நன்மையான விளைவுகளை ஏற்படுத்துவதோடு அநேகமான பாதகங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. எனவே பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் சமூக வலைதளப் பாவனையின் நிலை மற்றும் அதன் சாதக, பாதகங்களைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீட இரண்டாம் வருட மாணவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது அளவுசார் விபரிப்பு ஆய்வு முறையியலைப் பயன்படுத்துவதோடு முதல் நிலைத்தரவுளைப் பெறுவதற்காக வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு (GOOGLE FORM) ஊடாக வழங்கப்பட்டன. இவ்வினாக்கொத்தானது குறித்த பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நூறு பேரிடம் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் MS EXCEL மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வில் இரண்டாம் வருட மாணவர்கள் மத்தியில் சமூக வலைத்தள பாவனை அதிகரித்த நிலையில் காணப்பட்டதுடன் அவர்கள் பெற்ற சாதகமான விளைவுகளாக பாடங்கள் சம்பந்தமான குறிப்புகள், ஆவணங்களைப் பெறுதல், கற்றல் மற்றும் உலகார்ந்த தகவல்களைப் பெறல் போன்றனவும் பாதகங்களாக நேரவிரயம், கற்றலில் ஆர்வமின்மை, உடல், உள, சமூக, பொருளாதார, தனிப்பட்ட ரீதியான பிரச்சினைகள் என்பனவும் முடிவுகளாக பெறப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *நிகழ்நிலைக்கல்வி, சமூக வலைதளங்கள், சமூக ஊடகங்கள்இ கொவிட் 19, பல்கலைக்கழக மாணவர்கள்*

---

**ஆய்வு அறிமுகம்**

*கல்வியானது மனிதகுல முன்னேற்றத்தின் தலையாயக் கருவியாகும். தற்போதுள்ள கொவிட்- 19 இடர்காலத்தில் கற்றல் செயற்பாடுகளானது நிகழ்நிலையாக இடம்பெறுவது பழக்கப்பட்ட ஒன்றாகவும், மாணவர்களுக்கு சாதகமானது ஒன்றாகவும் மாறிவிட்டன. உலக அளவிலும் இதன் நிலையானது இவ்வாறே நீடிக்கப்படுவதனால் இச்சூழ்நிலைக்கு உட்பட்ட வகையிலே கல்வி செயற்பாடுகள் இடம்பெறுகிறது. இதில் தொழில்நுட்ப சாதனங்களினால் சமூக வலைத்தளங்களின் உதவியின் ஊடாகவும் அதன் பயன்பாட்டின் ஊடாகவும் கல்வியைத் தொடர்வது அதிமுக்கியமான ஒன்றாக மாறிவிட்டன. இதனைச் சுருக்கமாக கூறுவதாயின் இன்று இணையத்தளத்தில் சமூக வலைத்தளங்களின் தழுவல் இன்றி ஒரு பல்கலைக்கழக மாணவனால் கல்வியைத் தொடர்வது சாத்தியமற்றதாகின்றன. இதனடிப்படையில் தொலைவில் இருக்கும் மாணவச் சமூகத்திற்கு கல்வியைக் கொண்டு சேர்க்கக் கூடிய ஒரு வழிமுறையாக சமூக வலைத்தளங்களானது செயற்பட்டு வருகின்றன. இப்படியாக இன்றைய மாணவச் சமுதாயத்திற்கும் சமூக வலைத்தளங்களிற்கும் இடையிலான இடைத்தொடர்பை இவ்வாறு கூறலாம். நிகழ்நிலைக்கல்வி அறிமுகமான மாணவர்களுக்கு இணையப் பயன்பாடின்றி இயங்க*

*முடியாத நிலை உருவாகியுள்ளது. இணையப் பரப்பானது பல்வேறு சமூக வலைத்தளங்களின் ஊடகத் தளமாக அமைந்துள்ளது. Facebook, WhatsApp, Imo, Instagram, Youtube, Twitter ஆகியன தற்போது அதிக பயன்பாட்டிலுள்ள சமூகவலைத்தளங்களிற்கு உதாரணங்களாகும் (யும்னா, 2020). இவ்வாறு இணையத்தளத்தை சமூக வலைத்தளங்களின் இயக்கங்களின் பால் இசைந்து செல்லக் கூடியவர்களாகவே இன்றைய மாணவச் சமூகம் காணப்படுகின்றது. இது தொடர்பாடல் துறையின் துரித வளர்ச்சியின் ஒரு விளைவாகும்.*

*சமூக வலைத்தளங்களின் ஊடாக பல நன்மைகள் காணப்படினும் அவற்றினை சரியான முறையில் பயன்படுத்த தவறுவதனால் கல்வி ரீதியாகவும், சுகாதார மற்றும் சமூக, பொருளாதார, தனிப்பட்ட ரீதியான ஏராளமான பிரச்சினைகளுக்கும் மாணவர்கள் முகங்கொடுத்து வருகின்றனர். இதிலும் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களும் அடங்குவர். இதனடிப்படையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் மத்தியில் சமூக வலைத்தளப் பாவனையானது எந்நிலையில் உள்ளது என்பதை அடையாளம் காணல். மற்றும் சமூக வலைத்தளப் பாவனை அதிகரிப்பினால் மாணவர்கள் எதிர்கொண்ட சாதக, பாதகங்களை கண்டறிதல் போன்றவற்றினை நோக்கங்களாகக் கொண்டு முடிவுகளை கண்டறிவதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*

*கொவிட் - 19 இடர்காலத்தில் மாணவர்களின் கற்றல் சார்ந்த விடயங்களானது நிகழ்நிலை மயப்படுத்தப்பட்டுள்ளதால் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் SMART PHONE மற்றும் INTERNET போன்றன சர்வ சாதாரணமாகி இதனால் சமூக வலைத்தளங்களின் பாவனையும் அதிகரித்துள்ளது. இது அவர்களது கற்றல் வாழ்க்கையிலும் மிகுந்த தாக்கம் செலுத்துகின்றன. எனவே இதனை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு இம் மாணவர்கள் மத்தியில் சமூக வலைதளப்பாவனையின் நிலை மற்றும் அதன் சாதக, பாதகங்களை கண்டறியவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை கொண்டுள்ளது.*

*01. சமூக வலைதளப் பாவனையானது மாணவர்கள் மத்தியில் எந்நிலையில் உள்ளது என்பதை அடையாளம் காணல்*

*02. சமூக வலைதளப் பாவனை அதிகரிப்பினால் மாணவர்கள் எதிர்கொண்ட சாதக, பாதங்களைக் கண்டறிதல்.*

*இந்தவகையில், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடமானது ஆய்வுப் பிரதேசமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் இரண்டாம் வருட மாணவர்களில் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட நூறு மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

## ***இலக்கிய மீளாய்வு***

*இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட இரண்டாம் வருட இளங்கலைப் பட்டதாரிகள் COVID-19 காலப்பகுதியில் சமூக வலைத்தளப் பாவனையின் மூலம் ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாக எந்தவொரு ஆய்வும் பெற்றுக்கொள்ளப் படவில்லை. மாறாக ஏனைய பல்கலைக்கழகங்கள், பாடசாலைகளின் மாணவர்களை*

*மையப்படுத்தி மேற்கொண்ட ஆய்வுகள் பற்றியே இலக்கிய மீளாய்வில் கலந்துரையாடப்படுகிறன.*

*'கொவிட் 19 தொற்று நோய்களின் போது உயர் கல்வியில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்திய கற்றலின் செயல்திறன்'. (பதுபரா மற்றும் பலர்., 2021). இந்த ஆய்வு கொவிட் 19 தொற்றுநோய்களின் போது நிகழ்நிலை ஊடாக தொலைதூர விரிவுரைகளைப் பயன்படுத்தி நீண்டகால கற்றலின் உண்மையை விளக்குகிறது. இந்த ஆய்வானது பண்புசார் அணுகுமுறையுடன் விவரண ஆய்வு முறையியலையும் பயன்படுத்தி, இலக்கியமீளாய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்விற்கு தரவு சேகரிப்பதற்காக கூகுல் படிவம் பயன்படுத்தப்பட்டது, இச்சூழ்நிலையில் மாணவர்களிடமிருந்து இலகுவாக தரவுகளைப் பெறுவதற்கே இம்முறை கையாளப்பட்டது. தற்போதைய கொவிட் -19 தொற்றுநோய்களின் போது கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறையின் செயல்திறனை அதிகரிப்பதற்காக திட்டமிடல், ஏற்பாடு, செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்வதிலிருந்து கற்றலை நிர்வகிப்பதில் விரிவுரையாளர்களின் பங்கு (ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன்) வழியாக தேவைப்படுகிறது.*

*'சமூக ஊடகங்கள் உறவு முறையில் ஏற்படுத்தும் தாக்கம் :கஹட்டோவிட்ட பிரதேசத்தின் 17 - 25 வயதினரை அடிப்படையாக கொண்டது'. ( மதீஹா மற்றும் பலர், 2015) எனும் ஆய்வில் சமூக ஊடகங்கள் உறவு முறையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட முடிவுகளை சமூகத்திற்கு அறியப்படுத்துவதன் மூலம் இந்நிலையை இழிவளவாக்குதல் என்பது ஆய்வு நோக்கமாகக் காணப்படுகிறது. பண்பு ரீதியான இவ் ஆய்விற்கு கஹடோவிட்ட பிரதேச மக்கள் தொடர்பாக அளவியல் தரவுகள் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையாக நேர்காணல், அவதானிப்பு, வினாக்கொத்து முறைகளில் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பிற்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், இணையத் தளங்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் முடிவுகளாக சமூக ஊடகங்களின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கின்றது. இதன் ஆளுகை வயது, பால், தர வேறுபாடின்றி காணப்படுவது வாழ்க்கையில் தாக்கங்களுக்கு காரணமாக அமைகின்றன. இத்தாக்கங்களானது நேர், மறைத் தாக்கங்களாக காணப்படுகின்றன. சமூக ஊடகங்களால் உறவு முறையில் பாரிய அளவில் நலவுகள் தோன்றியுள்ளன. அதே போன்று தான் அருகில் உள்ள உறவுகள் தூரமாதல், நோய்கள் தோன்றல் செலவு போன்றன மறைத் தாக்கங்களாக இனங்கானப்பட்டுள்ளன. இன்று சமூக ஊடகங்களானது இவ்வயதினர் மத்தியில் பிரிக்க முடியாத ஒரு சக்தியாக மாறியுள்ளது. இதன் மூலம் பல சாதக, பாதகங்கள் ஏற்படுவதும் நிதர்சனமானது என்பவைகள் இவ் ஆய்வின் முடிவுகளாக இனங்காணப்பட்டுள்ளன.*

*'சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவணையும் பாடசாலை மாணவர்களின் விழுமியப் பாதிப்பும்' (யும்னா, 2020). எனும் ஆய்வில் பாடசாலை மாணவர்களின் அதிகரித்த சமூக வலைத்தளப் பாவணையால் அவர்களின் விழுமியத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை கண்டறிதல் என்பது ஆய்வு நோக்கமாகக் காணப்படுகிறது. இவ் ஆய்வானது பண்பு ரீதியான ஆய்வாகும். கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட கல்வி வலயத்திற்கு உட்பட்ட மீரிகம கோட்டத்திலுள்ள 4 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு நோக்க மாதிரியைக் கொண்டு கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் ஆய்விற்கு உட்படுத்தப்*

*பட்டிருக்கின்றன. நேர்முகங்காணல், வினாக்கொத்து மற்றும் அவதானம் ஆகிய கருவிகளைக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. இவ் ஆய்வின் முவுகளாக அதிகமான மாணவர்கள் சமூக வலைத்தளங்களின் பாவணையால் தமது விழுமியத்தை இழந்து வருகின்றனர். மேலும் உளவியல், சுகாதார, சமூக, ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கு பிள்ளைகள் ஆளாகியுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளன. இதனால் பாதிப்படையும் கற்றலையும், எதிர்காலத்தையும் வளம்படுத்த கற்றல் செயற்பாடுகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை நடைமுறைப்படுத்தல், பெற்றோர் - பிள்ளை இடைத்தொடர்பை அதிகரித்தல் என்பன இவ் ஆய்வின் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.*

*'தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவணையும், அவற்றின் விளைவுகளும் - கல்லடி பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு'. (டயசியா, 2017) எனும் ஆய்வில் தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவணையும் அவற்றின் விளைவுகளும் என்பதை பிரதான நோக்ககாக காணப்படுகிறது. வரையறுக்கப்பட்ட வகையில் தரம் 10, 11, 12 மாணவர்களின் ஊடகப் பாவணை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. வினாக்கொத்து, போட்டிமுறை, கலந்துரையாடல் என்பன மூலம் முதலாம் நிலைத் தரவுகளும், கிராம சேவகர் அறிக்கை, பாடசாலை அறிக்கைகள், புள்ளி விபரங்கள் முலம் இரண்டாம் நிலைத் தரவுகளும் பெறப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களானது 51 மூ மாணவர்களால் பயன்படுத்தப்படுவதும், சமூக வலைத்தளங்கள் பயன்படுத்துவதால் மாணவர்கள் மத்தியில் கல்வியில் மந்த கதி, ஞாபக மறதி, தனிமைப்படுதல், சமூக ஊடகங்களின் பால் அதிகம் ஈர்க்கப்படும் என்பன ஆய்வு முடிவுகளாக பெறப்பட்டுள்ளன.*

*'கொவிட் - 19 காலத்தில் சமூக வலைதளங்களின் பங்கு' எனும் தலைப்பில் (மஹ்ஸா டலிலி மற்றும் பலர், 2020). ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் COVID 19 காலத்தில் சமூக வலைத்தளங்களை மக்கள் எவ்வாறு பயன்படுத்தி உள்ளனர் என்பது பற்றிய ஆய்வாக அமைந்துள்ளது. இவ்வாய்வுக்கான தகவல்கள் வினாக்கொத்து மூலம் பெறப்பட்டிருக்கின்றது. COVID 19 பரவல் அதிகரித்ததன் விளைவாக சமூக வலைத்தளங்களின் பாவனையானது மக்கள் மத்தியில் அதிகரித்திருப்பதோடு கல்வி நடவடிக்கைகள் இதன் மூலமே இடம்பெற்றது. மேலும் சமூக வலைத்தளங்கள் மூலம் சில பாதிப்புக்களும் இடம்பெற்றதாக ஆய்வில் கண்டறியப்பட்டிருந்தது. மேலும் இவை சமூக இடைவெளியுடனான நிகழ்வுகளை அதிகம் கொண்டிருப்பதால் நன்மை பயக்குகின்றது என்பது ஆய்வின் முடிவாக பெறப்பட்டது.*

*'கொவிட்- 19 காலத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் தர நிலை மாணவர்கள் மத்தியில் சமூக வலைதளங்களின் பங்கு' எனும் தலைப்பில் (இக்பால் ரட்வான் மற்றும் பலர், 2020) ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் COVID 19 காலப்பகுதியில் சமூக வலைத்தளங்கள் மாணவர்களிடத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றி விளக்குகிறது. இவ்வாய்வுக்கான தகவல்கள் வினாக்கொத்து மூலம் பெறப்பட்டிருக்கின்றது. COVID 19 காலப்பகுதியில் சமூக வலைத்தளங்கள் மாணவர்கள் மிகவும் பலமாகவும், உறுதுணையாகவும் இருந்துள்ளதோடு உளச்சுகாதார ரீதியாக சில பாதகங்களையும் ஏற்படுத்தியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையால் தொடர்ச்சியாக*


ISBN: 978-624-5736-55-3

*நிகழ்நிலை மூலமாகவே வகுப்புக்கள் இடம்பெற்றதால் சமூகவலைத்தளங்கள் மாணவர்களது பிரதான இடத்தை வகித்துள்ளது என்பது ஆய்வின் முடிவாக பெறப்பட்டது.*

*மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் எமது ஆய்வுக்கு பெரிதும் துணைபுரிகின்றன. அதாவது COVID 19 காலப்பகுதியில் சமூக வலைத்தளங்கள் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பது பற்றியும் அதன் நிலை, அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் மற்றும் இன்னும் பல தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. எனினும் இவ்வாய்வானது எமது ஆய்விலிருந்து வேறுபட்டே காணப்படுகிறது. மேலும் இவ்வாய்வானது COVID 19 காலப்பகுதியில் சமூக வலைத்தளப் பாவனையின் போது இளநிலைப் பட்டதாரிகள் எதிர்நோக்கிய தாக்கங்களை கண்டறிவதற்காவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**ஆய்வு முறையியல்**


*அளவு சார் மற்றும் பண்பு சார் முறையில் அமைந்த இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட இரண்டாம் வருட மாணவர்களிடமிருந்து எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 100 பேரிடம் வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளது. Google Form ஊடாக வினாக்கொத்து வழங்கப்பட்டு EXCEL இன் மூலம் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களிடம் கட்டமைக்கப்படாத நேர்காணல் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன். இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டன.*

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்.**

*இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட இரண்டாம் வருட மாணவர்களிடத்தில் சமூக வலைதளப் பாவனை தொடர்பான விடயங்கள் பின்வருமாறு கலந்துரையாடப்படுகின்றன.*

***1.அதிகமாக பாவிக்கப்படும் சமூக வலைதளங்கள்***

*இந்த ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிடம் அதிகமாக பாவிக்கப்படும் சமூக வலைதளங்கள் எவை? என்பது தொடர்பாக கேட்கப்பட்ட போது, 100% மாணவர்கள் WhatsApp இனையும், 53.8% YouTube இனையும், 26.9% மாணவர்கள் Facebook இனையும்,21.2% மாணவர்கள் Instagram இனையும் பாவிப்பதாக கூறியுள்ளனர். இதனை கீழுள்ள படம் - 01 விபரிக்கின்றது.*





*படம் 01: அதிகமாக பாவிக்கப்படும் சமூக வலைதளங்கள்*

*அத்தோடு ஒரு நாளில் WhatsApp, YouTube போன்ற சமூக வலைதளங்கள் அதிகம் பாவிப்பதாகவும் கூறியுள்ளனர், அதற்குரிய காரணங்களாக*

- *மற்றைய வலைதளங்களை விட இந்த apps களை பாவிப்பதற்கு மிக விருப்பம்.*
- *இந்த apps களில் அதிக பலன் இருப்பதாக உணர்கின்றனர்.*
- *இது அவர்களது கற்றலுக்கு மிகவும் பயன்மிக்கதாக உணர்கின்றனர்.*
- *இவைகளில் நேரம் வீணாகக் கழியாது என்றும் கூறியுள்ளனர்.*

***2. நாளொன்றில் சமூக வலைதளங்களுக்காக செலவிடும் மணித்தியாலங்கள்***


*மாணவர்களிடம் நாளொன்றில் சமூக வலைதளங்களுக்காக செலவிடும் மணித்தியாலங்கள் தொடர்பாக கேட்கப்பட்டபோது, அதிகமான மாணவர்கள் அதாவது 26.9% மாணவர்கள் நாளொன்றில் 3 மணித்தியாலங்கள் பாவிப்பதாகவும், 25 மூ மாணவர்கள் 4 மணித்தியாலங்களும், 19.2% மாணவர்கள் 2 மணித்தியாலங்களும், 13.5% 1 மணித்தியாலமும் அதிகமாக பாவிப்பதாக கூறியுள்ளனர். இதனை கீழுள்ள படம் - 02 விபரிக்கின்றது.*




*படம் 02: நாளொன்றில் சமூக வலைதளங்களுக்காக செலவிடும் மணித்தியாலங்கள்*

***3. சமூக வலைதளப் பாவனை அதிகரிப்பினால் கல்வியின் மீதான ஆர்வம்***

*மாணவர்களிடம் சமூக வலைதளப் பாவனை அதிகரிப்பினால் கல்வியின் மீதான ஆர்வம் தொடர்பாக கேட்கப்பட்ட போது, 55.8% மாணவர்கள் ஓரளவுக்கு ஆர்வமிருப்பதாகவும், 25% மாணவர்கள் ஆர்வம் குறைவடைந்துள்ளதாகவும், 11.5% மாணவர்கள் சமூக வலைதளங்களில் அதிகமிருப்பதாகவும், மற்றும் வேறு விடயங்களில் ஈடுபாடு அதிகம், கல்வியில் அறவே ஆர்வமில்லை கூறியுள்ளனர். இதனை கீழுள்ள படம் - 03 விபரிக்கின்றது.*





*படம் 03: சமூக வலைதளப் பாவனை அதிகரிப்பினால் கல்வியின் மீதான ஆர்வம்*


ISBN: 978-624-5736-55-3

***4. கற்றல் நடிக்கைகளுக்கு தடையாகும் சமூக வலைதளப் பாவனை***

*மாணவர்களிடம் கற்றல் நடவடிக்கைகளுக்கு சமூக வலைதளப் பாவனை தடையாகின்றதா? என்பது தொடர்பாக கேட்கப்பட்ட போது, அதிகமானவர்கள் அதாவது 60.8% மாணவர்கள் தடையாகவுள்ளன எனவும், குறைவான 39.2% மாணவர்கள் தடையில்லை என்றும் கூறியுள்ளனர். இதனை கீழுள்ள படம் - 04 விபரிக்கின்றது.*





*படம் 04: கற்றல் நடிக்கைகளுக்கு தடையாகும் சமூக வலைதளப் பாவனை*

***சமூக வலைதளப்பாவனையானது எவ்வாறு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு தடையாக அமைகின்றன என்பது தொடர்பாக கேட்கப்பட்டபோது மாணவர்கள் பின்வரும் விடயங்களை வினாக்கொத்தில் அடையாளப்படுத்தி இருந்தார்கள்.***

*ஏனைய விடயங்களில் ஆர்வம் அதிகரித்தல்இ சமூக வலைதளப் பாவனை மாணவர்களை அதிலேயே மூழ்கடித்து விடுகின்றனஇ கற்றல் விடயங்களுக்கு தொலைபேசியினை உபயோகிக்கும் போது வேறு விடயங்களுக்கு தானாக இசைவாக்கமடைதல், கற்பதற்கு ஆர்வம் குறைவடைகின்றது மற்றும் நேரவிரயம், பாடக் குறிப்புகள் தேடும் போது கூடுதலான Whatsapp messages இடையூறாக அமைதல், சமூக வலைதளப் பாவனை அதிகரிப்பினால் ஏற்படும் கண்வலி, தலைவலி, மன அழுத்தம் போன்ற பாதிப்புகளானது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைளுக்கு ஒரு தடையாகும், நேரடியான கற்றலைவிடவும் தற்போதுள்ள நிகழ்நிலை மூலமான கற்றலிற்காக தொலைபேசிப் பாவனையானது அதிகரித்துள்ளன. எனவே தானாகவே மாணவர்கள் சமூக வலைதளப் பாவனைக்கு அடிமையாகின்றனர், சமூக வலைதளப் பாவனை அதிகரிப்பினால் கற்றலில் முழுமையாக கவனம் செலுத்த முடியவில்லை, கவனச் சிதறல்கள் ஏற்படுகின்றன இவ்வாறான விடயங்களை மாணவர்கள் வினாக்கொத்தில் கூறியுள்ளனர்.*

***5. கொவிட்- 19 காலத்தில் சமூக வலைதளப் பாவனையின் அதிகரிப்பு***


*மாணவர்களிடம் கொவிட்- 19 காலத்தில் சமூக வலைதளப் பாவனையானது அதிரித்துள்ளதா? எனக் கேட்கப்பட்டபோது, 92. 2% மாணவர்கள் அதிரித்துள்ளது என உணர்வதாகவும் கூறியுள்ளனர. இதனை கீழுள்ள படம் - 05 விபரிக்கின்றது.*




படம் *05:* கொவிட்- *19* காலத்தில் சமூக வலைதளப் பாவனையின் அதிகரிப்பு

***6.* மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் சமூக வலைதள மென்பொருள்கள்**


மாணவர்களிடம் அதிகம் பயன்படுத்தும் சமூக வலைதள மென்பொருள்கள் தொடர்பாக கேட்கப்பட்டபோது, *96. 2%* மாணவர்கள் *WhatsApp, 43.3%* மாணவர்கள் *YouTube, 3.8%* மாணவர்கள் *Facebook* போன்றவைகளை பயன்படுத்துவதாகவும் கூறியுள்ளனர். இதனை கீழுள்ள படம் - *06* விபரிக்கின்றது.




படம் *06:* மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் சமூக வலைதள மென்பொருள்கள்

***7.* அதிகம் நேரவிரயமாக்கும் சமூக வலைதள மென்பொருள்கள்**

மாணவர்களிடம் அதிகம் நேரவிரயமாக்கும் சமூக வலைதள மென்பொருள்கள் தொடர்பாக கேட்கப்பட்டபோது, அதிகமானவர்கள் அதவாது *52. 9%* மாணவர்கள் *WhatsApp* இலும், *39.2 % YouTube* மற்றும் *Facebook* யிலும், *19. 6%* மாணவர்கள் *Instagram* இலும் நேரவிரயம் இருப்பதாக கருதுகின்றனர். சமூக வலைதள மென்பொருள்களில் *WhatsApp* இன் மூலம் சில முக்கிய பயன்பாடுகள் இருந்தாலும் அதில் மாத்திரம் அதிக நேரம் விரயமாகின்றன என்பதோடு மற்றைய மென்பொருள்களிலும் நேரவிரயம் இருப்பதாக இதன் மூலம் அவதானிக்க முடியுமாக இருக்கின்றது. இதனை கீழுள்ள படம் - *07* விபரிக்கின்றது.




படம் ***07:*** அதிகம் நேரவிரயமாக்கும் சமூக வலைதள மென்பொருள்கள்


ISBN: 978-624-5736-55-3


அத்தோடு மேற்குறிப்பிட்ட மென்பொருள்களை பயன்படுத்தும்போது எவ்வாறு நேரவிரயமாகின்றன என்பது தொடர்பாக மாணவர்களிடம் கேட்கப்பட்டபோது மாணவர்கள் பின்வரும் விடயங்களை வினாக்கொத்தில் அடையாளப்படுத்தி இருந்தார்கள்.

பொழுதுபோக்கான அவசியமற்ற காணொலிகள் பார்த்தல் மற்றும் பகிரப்படுதல், தேவையற்ற குறுஞ் செய்திகள் பகிரப்படுதல், நண்பர்கள் இருக்கும் Whatsapp குழுமங்களில் இருந்து வரும் அதிகமான குறுஞ்செய்திகள் பார்க்கப்படல், அது அதிகம் பகிரப்படுவதனால் Phone leading ஆகுதல் போன்றவற்றாலும் நேர விரயமாகின்றன, சமூக வலைதளப் மென்பொருள்களைப் பயன்படுத்துவதில் இயல்பாகவே மூழ்விடும் தன்மை, சினிமா பாடல்கள், படக் காட்சிகளை பார்த்தல், கேட்டல் மற்றும் அவைகள் பகிரப்படுதல், தேவை இல்லாத விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது, அசிங்கமான திரைப்படக் காட்சிகளும் இதன் மூலம் பார்க்கப்படுகின்றனஇ Whatsapp, Facebook Status கள் அதிகம் பார்க்கப்படல்.

எனவே இவ்வாறான விடயங்களும் இந்த சமூக வலைதள மென்பொருள்கள் மூலம் நேரவிரயமாவதற்கு காரணமாகின்றன.

**8. தீய விளைவுகள் அதிகம் காணப்படும் சமூக வலைதள மென்பொருள்கள்**

மாணவர்களிடம் தீய விளைவுகள் அதிகம் காணப்படும் சமூக வலைதள மென்பொருள்கள் தொடர்பாக கேட்கப்பட்டபோது, 74. 4 % மாணவர்கள் Facebook இலும், 48. 8% மாணவர்கள் YouTube மற்றும் Instagram இலும், 39. 5% மாணவர்கள் IMO இலும், அதிக தீய விளைவுகள் இருப்பதாகவும், மற்றும் WhatsApp, Viber, Twitter போன்றவற்றிலும் ஓரளவுக்கு இவ்வாறான நிலை இருப்பதாகவும் கூறியுள்ளனர். எனவே Facebook, YouTube, Instagram, IMO போன்றவற்றின் பாவனையினால் அதிக தீய விளைவுகள் இருப்பதாக இதன் மூலம் தெரிய வருகிறது. இதனை கீழுள்ள படம் - 08 விபரிக்கின்றது.




படம் 08: தீய விளைவுகள் அதிகம் காணப்படும் சமூக வலைதள மென்பொருள்கள்

சமூக வலைதளப் பாவனையினால் மாணவர்கள் அடைந்து கொள்ளும் நன்மைகள் தொடர்பாக் பின்வரும் விடயங்களை கலந்துரையாடல் மூலம் பிரதானப்படுத்தி இருந்தார்கள்.

கல்வி செயற்பாடுகள் இடம்பெறுதல், நாட்டு நடப்பு விவகாரங்கள் மற்றும் உலகார்ந்த தகவல்களைப் உடனுக்குடன் பெற முடிதல், தேவையான புதிய தகவல்களை மற்றும் பொதுவான விடயங்களை தெரிந்துகொள்ளல், எமது கற்றலுக்குத் தேவையான விடயங்களை தேடி அறிந்து

*கொள்ளல், நண்பர்களுடன் தொடர்பு கொள்ளல் மற்றும் புதிய உறவுகளைப் பெறுதல், பாடங்கள் தொடர்பான குறிப்புகளைப் பெறல், பொழுதுபோக்கிற்காகவும் பயன்படுத்தல். போன்றவற்றினை நன்மைகளாக குறிப்பிட்டிருந்தனர்.*

*சமூக வலைதளப் பாவனையினால் மாணவர்களுக்கு ஏற்படும் தீமைகள் தொடர்பாக் பின்வரும் விடயங்களை கலந்துரையாடல் மூலம் பிரதானப்படுத்தி இருந்தார்கள்.*

*நேரம் விரயமாதல், சில தவறான, போலியான தகவல்கள் பகிரப்படுதல், கண் பார்வை தொடர்பான பிரச்சினைகள்,தலைவலி,கண்ணீர் வடிதல்,கல்வியில் ஆர்வமின்மை போன்ற பாதிப்புகளுக்கு ஆளாதல், உடல் ரீதியான பிரச்சினைகள் (நோய்கள்) மற்றும் சமுகங்களுடனான நேரடித் தொடர்பு இல்லாமல் போதல், அதிக நேரத்தை சமூக வலைதளப் பாவனையில் செலவிடுதல், சமூக வலைதளப் பாவனைக்கு அடிமையாகியது போன்ற உணர்வு ஏற்படல், உளரீதியிலான சில நோய்களுக்கு ஆளாதல், அதிகமான அளவில் சமூக வலைத்தளங்களில் இருக்கும் போது தேவையான விடயங்கள் குறித்து ஆராய்வது குறைவடைதல், சில சமூகப்பிரச்சினைகள் ஏற்படல் போன்றன இவற்றின் மூலம் ஏற்படும் தீமைகளாகும்.*

***இந்த சமூக வலைதள (WhatsApp, Face book, YouTube, Twitter) போன்ற மென்பொருள்கள் மாணவர்களின் கற்றலுக்குப் பயன்படும் விதம் தொடர்பாக் பின்வரும் விடயங்களை கலந்துரையாடல் மூலம் பிரதானப்படுத்தி இருந்தார்கள்.***

*Pdf, Word Documents, Slides, Sessions' (ZOOM) links, etc. போன்றன WhatsApp யில் பகிரப்படல், முக்கியமான தகவல்கள், பதிவுகள், Audio recordings, Drives களில் upload செய்யப்பட்ட Zoom class recording links கள் Whatsapp யில் பகிரப்படல், சில சந்தேகங்கள் whatsapp group Calls மூலமாக தெளிவு படுத்தப்படல், Youtube மூலம் சில கற்றல் சார்ந்த செயற்பாடுகளும் இடம்பெறுவதுண்டு, சில கற்றல் சார்ந்த பொதுவான நிகழ்ச்சிகள் FaceBook live மூலம் இடம்பெறுதல்.*

*மேற்குறிப்பிடப்பட்ட சில விடயங்களானது மாணவர்களின் கற்றலுக்கு சமூக வலைதள மென்பொருள்கள் பயன்படும் விதங்களை எடுத்துரைத்தன.*

*சமூக வலைதளப் பாவனையினால் மாணவர்கள் எதிர்கொண்ட சில உடலியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்கப்பட்டபோது மாணவர்கள் பின்வரும் விடயங்களை வினாக்கொத்தில் அடையாளப்படுத்தி இருந்தார்கள்.*

***தலைவலி, கண் வலி, உடல் சோர்வு, தூக்கமின்மை, நரம்பு சார் பிரச்சினைகள,; மூளை சார் பிரச்சினைகள், முதுகு வலி, உடம்பில் ஏற்படும் மாற்றங்கள்***

*சமூக வலைதளப் பாவனையினால் மாணவர்கள் எதிர்கொண்ட சில உளரீதியான பிரச்சினைகள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்கப்பட்டபோது மாணவர்கள் பின்வரும் விடயங்களை வினாக்கொத்தில் அடையாளப்படுத்தி இருந்தார்கள்.*

***உளச்சோர்வு, மனஅழுத்தம், விரைவில் எரிச்சல் ஏற்படல், அதிக கோபம், நிதானமின்மை, கவலை போன்ற உணர்வு ஏற்படல், கவனச் சிதறல்கள், .வெறுப்புணர்வு ஏற்படுதல்.***

*சமூக வலைதளப் பாவனையினால் மாணவர்கள் எதிர்கொண்ட சில சமூக ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்கப்பட்டபோது மாணவர்கள் பின்வரும் விடயங்களை வினாக்கொத்தில் அடையாளப்படுத்தி இருந்தார்கள்.*

*சமூகங்களோடு ஒன்றித்து பழகாமை, சமூக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளாம, போலியான, நம்பகமில்லாத செய்திகள் பரப்பப்படல,; தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படல,; தங்களது தேவையை உணராமல் ஏனையவர்களின் விடயங்களில் கவனம் செலுத்துதல், குடும்பங்களில் உறவு முறையில் பிரச்சினைகள் ஏற்படல,; போலியான தகவல்களால் ஏமாற்றங்களுக்கு உட்படல்.*

*சமூக வலைதளப் பாவனையினால் மாணவர்கள் எதிர்கொண்ட சில பொருளாதார ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்கப்பட்டபோது மாணவர்கள் பின்வரும் விடயங்களை வினாக்கொத்தில் அடையாளப்படுத்தி இருந்தார்கள்.*

*அதிக data பாவனையால் செலவீனம் அதிகமாதல், Data பாவனைக்காக வீட்டில் பணம் திருடுதல், Youtube, Facebook, Instagram போன்ற சமூக வலைதள மென்பொருள்களில் அதிகம் தீய விளைவுகள் இருப்பதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.*

***முடிவுரை***

*இந்த கொவிட் - 19 தொற்றுச் சூழலில் உலகில் பெரும்பாலான செயற்பாடுகள் இணையம் ஊடாக நடைபெறுவதற்கு ஏற்ப மாற்றமடைந்துவருகிறது. அந்த வகையில் மனிதனுக்கு மிக அவசியமான கல்விச் செயற்பாடுளும் கூட நிகழ்நிலை மூலமும், சமூக வவைதளங்களின் உதவியினூடாகவும் இடம்பெறுகின்றன. இணையம் மற்றும் சமூக வலைதளங்கள் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக இன்றைய மாணவச் சமூகத்தின் மத்தியில் மாறியுள்ளது. இன்று உலகின் எல்லா நாடுகளிலும் நிகழ்நிலைக்கல்வியானது பரீட்சயமான ஒன்றாகவும் மாறிவிட்டதால் சில கற்றல்சார்ந்த செயற்பாடுகளுக்கு WhatsApp, Facebook, YouTube போன்ற சமூக வலைதளங்களானது அனைத்து மாணவச் சமூகத்தரப்பினராலும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. Facebook, WhatsApp, YouTube, Instagram, Twitter, Imo போன்ற சமூக வலைதளங்களின் பாவனைக்கு மாணவச் சமூகமானது விரைவாகவே இசைவாக்கமடைகின்றன. கற்றல் நோக்கம் மறந்து தவறுதலாக சமூக வலைதளங்களை பாவிப்பதும், அதிகரித்த சமூக வலைதளப் பாவனையும் பல்கலைக்கழக மாணவர்களின் மத்தியில் கற்றல் சார்ந்த மற்றும் பொருளாதார, சமூக, சுகாதார ரீதியிலான சில பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றன. எனவே இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீட மாணவர்களும் விதிவிலக்கானவர்கள் இல்லை என்னும் எடுகோலினை நிறுபிக்க முயன்றபோது சில முடிவுகள் கிடைக்கப்பெற்றன.*

*குறித்த பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் மத்தியில் சமூக வலைதளப் பாவனை அதிகரித்த நிலையில் காணப்பட்டதுடன் சமூக வலைதளப் பாவனையின் அதிரிப்பினால் அவர்கள் எதிர்நோக்கிய சாதகங்களாக கற்றல் சார்ந்த செயற்பாடுகள் இடம்பெறல், உலகார்ந்த மற்றும் பொதுவான தகவல்களை உடனுக்குடன் பெறமுடிதல், பாடங்களை சம்பந்தமான குறிப்புகள், ஆவனங்களைப் பெறமுடிதல் போன்றனவும் அதன் பாதகங்களாக நேரம் விரயமாதல், சில தவறான மற்றும்*


ISBN: 978-624-5736-55-3

*போலியான தகவல்கள் பகிரப்படுதல், மாணவர்கள் எதிர்நோக்கும் உடல், உளரீதியிலான நோய்கள், சமூக மற்றும் பொருளாதா, தனிப்பட்ட ரீதியிலான பிரச்சினைகள், கற்றலில் ஆர்வமின்மை போன்றனவும் இதில் அடங்குகின்றன. எனவே இவ் ஆய்வின் நோக்கங்களானது சரிவர அடையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.*

***ஆய்வின் பரிந்துரைகள்***

*1. கல்வி ரீதியான நடவடிக்கைகளுக்கு மாத்திரம் சமூக வலைத்தளங்களை உபயோகிக்குமாறு மாணவர்களுக்கு அறிவூட்டல் வேண்டும்.*

*2. சமூக வலைத்தளங்களின் பாவனையால் ஏற்படும் நன்மை, தீமைகளை மாணவர்கள் மத்தியில் விழிப்பூட்டுவதற்காக முறையான, துறைசார்ந்த வளவாளர்களை வைத்து கருத்தரங்குகளை நடத்துதல் வேண்டும்.*

*3. பொழுதுபோக்கிற்காக சமூக ஊடகங்களினை பாவிப்பதாக இருப்பினும் அதற்கான வரையறுக்கப்பட்ட நேரத்தில் மாத்திரம் பாவனை செய்யுமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கல் வேண்டும்.*

*4. அதிமாக நேரத்தினை விரயம் செய்யக் கூடிய வகையில் அமையும் சமூக வலைத்தளங்களை மாணவர்கள் நாடாது விலகியிருக்குமாறு தெளிவுபடுத்தல் வேண்டும்.*

*5. சமூக வலைத்தளங்களில் வீணான விளையாட்டுக்கள், தேவையற்ற குழுமங்களில் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களை சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.*

*6. தீய விளைவுகளை ஏற்படுத்தும் சமூக ஊடகங்களில் இருந்து விலகியிருக்குமாறு அறிவுரை வழங்கல் வேண்டும்.*

*7. மாணவர்கள் சமூக வலைத்தளங்களின் மூலம் கல்வி நடவடிக்கைகளை தொடர்கிறார்களா அல்லது தேவையற்ற விடயங்களை கைக் கொள்கிறார்களா என பெற்றோர்கள் அடிக்கடி கண்காணிக்க வேண்டும்.*

*8. சமூக வலைத்தளங்களை பாவிக்கும் போது சுய கட்டுப்பாட்டுடன் உபயோகிக்குமாறு மாணவர்களுக்கு தெளிவினை வழங்கல் வேண்டும்.*

***உசாத்துணைகள்***

Batubara, I.S., Nur, K., Lubis, A.T. & Arianto, N. (2020). "The Effectiveness of Learning Using Social Media during the Covid 19 Pandemic in Higher Education" *Budapest International Research & Critics Institute - Journal (BIRCI - Journal)* from: https://doi.org/10.33258/birci.v4i2.19082177

Jayarathna, L. , Fernando, W. (2014). 'Relationship between Facebook Usage and the Student Engagement of Sri Lankan Management Undergraduates'. World Academy of Science, Engineering and Technology, Open Science Index 92, International Journal of Industrial and Manufacturing Engineering, 8(8), 2697 - 2701.

Kariapper, R. K. A. R. (2020). Impact of Youtube in Higher Education in Sri Lanka. *Test Engineering & Management, The Mattingley Publishing Co., Inc. ISSN*, *83*(May-June),

29592–29603.

Nafrees, A. C. M., Roshan, A. M. F., Baanu, A. N., Nihma, M. N. F., & Shibly, F. H. A. (2020). Awareness of Online Learning of Undergraduates during COVID 19 with special reference to South Eastern University of Sri Lanka. *Journal of Physics: Conference Series*, *1712*(1), 012010. https://doi.org/10.1088/1742-6596/1712/1/012010

Nusrath Banu, M. (2019). MASSIVE USE OF SOCIAL MEDIA AND THE CHALLENGES FACED BY YOUTH ; A SOCIOLOGICAL RESEARCH ON SAMMANTHURAI. *8 Th Annual International Research Conference*, 236–243.

Rani, P. U., & Padmalosani. (2019). Impact of social media on youth. *International Journal of Innovative Technology and Exploring Engineering*, *8*(11 Special Issue), 786–787. https://doi.org/10.35940/ijitee.K1138.09811S19

Radwan, E., Radwan, A. & Radwand, W. (2020). "The role of social media in spreading panic among primary and secondary school students during the COVID-19 pandemic: An online questionnaire study from the Gaza Strip, Palestine" *Heliyon: A Cell Press journal, from:* https://doi.org/10.33258/birci.v4i2.1908

Razeeth, S., Kariapper, R., Pirapuraj, P., Rishan, U., & Nafrees, A. (2019). Impact of Social Networking Media among Undergraduates in Higher Educational Institution. *4th Annual Research Conference*, *TRINCO 2019*, 22.

Roshan, A. M. ., & Nafrees, A. C. . (2019). WHAT’S UP WITH WHATSAPP? A CASE STUDY AMONG VAALACHANAI RESIDENTS IN BATTICALOA DISTRICT, SRI LANKA. *South Eastern University International Arts Research Symposium*, (December), 533–540. Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

Roshan, A. M. F., Nafrees, A. C. M., Rija, U. L. M., & Kariapper, R. (2019). WhatsApp usage among the selected schools students in Kalmunai, Sri Lanka. *KALAM – International Research Journal*, *12*(1), 83–96.

Shoaei, M.D. & Dastani, M. (2020). "The Role of Social Media During the COVID-19 Crisis: A Narrative Review" *Health Tech Asmnt Act. 2020 August; 4(1).* from: https://www.researchgate.net/publication/344582029

Sumaiya, MA. , Safiyya, AH. , Mahzoom, ARM. (2019). *பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களுக்கு மத்தியில் WHATSAPP பாவனையும் அதன் தாக்கங்களும்: இலங்கை தென்கிழக்கு பல்கைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு. Proceeding Sixth International Symposium*: Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka, Oluvil.


ISBN: 978-624-5736-55-3

Tennakoon, WDNSM, Lasanthika, WJAJM and Silva, MMSR. (2018). Impact of social media usage on academic performance: A case of undergraduates in Sri Lankan state universities. *Research conference on Business studies*: Jaffa Sri Lanka.

Yumna, A.S.F. (2020). Negative Effects of Social Media on Moral Values of School Children. *7th International Symposium 2020, FIA, SEUSL.*

*டயசியா.பு, (2017). தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும் அவற்றின் விளைவுகளும் – கல்லடிப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு. ஏழாவது சர்வதேச ஆய்வு மாநாடு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.*

*ஷமீரா, அப்துல் வாஹிட் பாதிமர் நாதிரா, அப்துல் குத்தூஸ் பாதிமா. (2016). இளைஞர்கள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கங்கள் : இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக கொண்ட ஆய்வு. ஆறாவது சர்வதேச ஆய்வு மாநாடு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.*

**இணையத்தளங்கள்**

*சமூக வலைத்தளங்களும் அதன் பயன்பாடுகளும். (2018).*

*சாஹிரா பானு, எம்.பி, (2019). சமூகவலைத்தளங்களின் பாவனையும் அதிகரித்து வரும் கலாச்சார சீர்கேடுகளும். https://newsplus.lk/feature/3621/*

*சிபானா, ஆர்.எப், (2019). இளைஞர்களும் சமூகவலைத்தளங்களும்.*

*யோகி அருமைநாயகம், (2013). சமூக வலைத்தளங்களும் அதன் பயன்பாடுகளும். https://www.panippookkal.com/ithazh/archives/1921*

*மனித வாழ்வில் சமூகவலைத்தளங்கள். (2020).* https://www.eaglevix.com

*மயூறினி வெலிச்சோர், (2018). சமூக வலைத்தளங்கள் இன்றைய சமூகத்தில் ஏற்படுத்தி வரும் தாக்கம். http://www.battinews.com/2018/11/Impact-of-Social-Media-on-Society.html*

*மாணவர்கள் சமூக வலைத்தளங்களை எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்?. (2018) https://kalvikoodam.wordpress.com/2018/10/22/*

*வஜ்ஹு{தீன். (2013). சமுக வலைதளங்கள்:நன்மையும், தீமையும். http://pnoexpress.blogspot.com/2013/06/blog-post_10.html?m=1*


ISBN: 978-624-5736-55-3